# கற்பகம் திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்-08 | பெப்ரவரி - 2017 | இதழ்-93


## குறளமுதம்-93

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-10 அறத்துப்பால் இனியவைகூறல்**

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்

ஒருவரைக் கண்டபொழுதே, முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி. பின்பு அவர் நெருங்கி வந்ததும், அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுவதே அறமாம்.



# சகாயநலத் திட்டத்தின்கீழ் 2 இலட்சம் ரூபா இழப்பீடு!

கோண்டாவில் ப.தெ. வ.அ.கூ.சங்கத்தின் அங்கத்தவர் இ.உதயபாலு அண்மையில் விபத்து மரணமடைந்தார்.

இவர் சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகாய நலத்திட்டத்தில் உறுப்பினராக உள்ளதால் பின்னுரித்தாளியான அவரது மனைவிக்கு சகாய நிதிக் கொடுப்பனவாக 2 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதனை சகாய நல நிதிக்குழு தலைவர், உறுப்பினர்கள், சமாசப் பொதுமுகாமையாளர், கோண்டாவில் சங்க பொதுமுகாமையாளர் உள்ளிட்டோர் நேரில் சென்று வழங்கினர்.

# சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் பாடசாலை உபகரணம் வழங்கல்!

சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அங்கத்தவர், பணியாளர் சமூக மேம்பாட்டு நலத்திட்டத்தின்கீழ் கடந்த 2002ம் ஆண்டு தொடக்கம் சங்கங்களின் அங்கத்தவர்கள். பணியாளர்களின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவும் வகையில் வருடாந்தம் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் இவ்வருடமும் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை அண்மையில் வழங்கியது.

இவ்வருடம் சுமார் 3 ஆயிரத்து 100 பேருக்கு மேற்பட்டோருக்கு சுமார் 10 இலட்சம் ரூபா நிதிச் செலவில் பாடசாலை உபகரணங்களை சமாசம் வழங்கியுள்ளது.

அதிக நிதிச்செலவில் இச்செயற்பாட்டை சமாசம் தொடர்ச்சியாக சிறப்பாக மேற்கொண்டு வருவது அங்கத்தவர், பணியாளர்கள் மட்டுமன்றி அவர்கள் சார்ந்தோரையும் கூட்டுறவில் பற்றுக்கொள்ள வைத்துள்ளது.

# "கற்பகதீபம்" பத்தாண்டு நிறைவு மலர் வெளியீடு!

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் தனது 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு "கற்பகதீபம்" எனும் மலரினை வெளியிட்டுள்ளது.

இவ் வெளியீட்டு விழா கடந்த டிசெம்பர் மாதம் 29ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு க.சுதாகரன் தலைமையில்வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு பொ.மோகன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சமாசத் தலைவர் திரு நா.கணேசன், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா, தென்மராட்சிக் கொத்தணித் தலைவர் திரு க.துரைசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(2ம் பக்கம் பார்க்க)



★ "கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்" ★

**சிந்தனைத்துளி**

"கூட்டுறவுப் போராளிகள் தமது இலட்சியத்தில் வெற்றிபெற ஏவுகணை போன்று பலமான ஆயுதமாக இருப்பது கூட்டுறவுக் கல்வியே"

# கற்பகக்கரு

## கூட்டுறவுக் கல்வியின் அவசியம்

இன்றைய பொருளாதார சமூக வணிகக் கட்டமைப்பில் கூட்டுறவியக்கம் பல சவால்களையும் எதிர்ப்புக்களையும் எதிர்நோக்கியுள்ளன. இவற்றை இலகுவில் எதிர்கொண்டு வெற்றிபெற கூட்டுறவுக் கல்வி மிகவும் அவசியம் என்பதை கூட்டுறவாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு நிறுவனத்தைப்பற்றிய பூரண அறிவுள்ளவர்கள் அந்நிறுவனத்தில் இணைந்துகொண்டால் மட்டுமே அந்நிறுவனம் தமது இலக்கை நோக்கி பயணிக்க முடியும். அந்நிறுவனத்தில் இணைந்துகொண்டவர்கள் அது தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ளாதவர்களாயிருப்பின் அவர்கள் அந்நிறுவனத்தின் எதிரிகள் ஆகவே நோக்கப்படுவார்கள்.

ஒரு கூட்டுறவு அமைப்பின் அங்கத்தவர்கள் பக்குவ நிலையை அடைவதற்கு கூட்டுறவுக் கல்வி முக்கியம் என கூட்டுறவின் தந்தை றொபேர்ட் ஓவன் அவர்கள் அன்றே தெரிவித்திருந்தார்.

ஒரு சங்கத்தில் இணைந்துகொண்ட அங்கத்தவர்கள் தமது சங்கத்தின் நோக்கம் குறிக்கோள் இலட்சியம் போன்றவற்றினை நிறைவேற்ற பொதுச்சட்டம், கூட்டுறவுச் சட்டம், சங்க நடைமுறைப்பிரமாணங்கள், உபவிதிகள் என்பவற்றோடு முரண்படாத வகையில் நேர்மையாகவும் கடமை உணர்வுடனும் விசுவாசத்துடனும் செயற்பட இக்கல்வி துணைபுரியும்.

ஒரு சாதாரண மனிதன் கூட்டுறவில் அங்கத்தவராக இணைந்துகொள்வதன்மூலம் எத்தனை நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெளிவுபடுத்த இக்கல்விப் பயிற்சியானது உறுதுணையாக உள்ளது.

கூட்டுறவுக் கொள்கைகள் கூட்டுறவுக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகள், நடைமுறைகள், செயற்பாடுகள் போன்றவற்றை அனைவருக்கும் போதிக்கவேண்டியது மிக அவசியமாகும். ஆனால் இன்றைய கூட்டுறவாளர்கள் அல்லது கூட்டுறவுத்துறை சார்ந்தவர்கள் கூட்டுறவுக் கல்வியில் நாட்டம் குறைந்தவர்களாக காணப்படுவதாலும், அவர்கள் இத்துறையில் இணைந்துகொண்டமையினால் கூட்டுறவின் வளர்ச்சி பின்தள்ளப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை ஒருசில கூட்டுறவுக் கல்வி பெற்றவர்கள் பயன்படுத்திக் கொள்வதனால் புதியவர்கள் இத்துறைக்கு வரப் பின்நிற்கின்றனர்.

கூட்டுறவின் உயர்ந்த இலட்சியங்களையும் பலாபலன்களையும் அங்கத்வர்களிடையே வேரூன்ற செய்து, அவற்றின் பலன்களை அவர்கள் பூரணமாக அனுபவிப்பதற்கு இக்கல்விப் போதனை மிகவும் அவசியமாகும். இக்கல்வியானது முகாமைத்துவக் கல்வி, கணக்கியல் கல்வி, ஒழுக்கக் கல்வி, துறைசார்ந்த கல்வி, சேவைக்கால கல்வி போன்ற நவீன கற்பித்தல் முறை மூலம் கற்றல் செயற்பாட்டினை கூட்டுறவு அமைப்புக்கள் மேற்கொள்வது காலத்தின தேவையாகும்.

எனவே புதிய உறுப்பினர்களை கூட்டுறவுத் துறையில் இணைத்து, அவர்களுக்கு போதிய அனைத்துக் கல்வியும் புகட்டப்படுமேயானால் இத்துறையானது மேலும் விரிவடைந்து ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களும் பணியாளர்களும் பொதுமக்களும் பயன்பெறத் தக்கதாக அமையும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

## மரநடுகை மாதத்தினை முன்னிட்டு அச்சுவேலி சங்கம் தென்னம்பிள்ளைகள், மாங்கன்றுகள் அன்பளிப்பு!

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மரநடுகை மாதத்தினை முன்னிட்டு அதன் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் தென்னம்பிள்ளைகள், மாங்கன்றுகள் என்பவற்றை இலவசமாக வழங்கியதுடன், சங்கத்தின் கிளைநிலையங்களிலும் மரக்கன்றுகளை நடுகை செய்தது. அதன் பதிவுகளை காணலாம்.







## கற்பகதீபம் ................ ( 1ம் பக்கத் தொடர்ச்சி )

இதில் வரவேற்புரையை நலன்புரிச் சங்கத்தின் உபதலைவர் திரு சு.சிறீகாந் அவர்களும், மலர் வெளியீட்டு உரையை மலர் ஆசிரியர் நி.பொ.ஜேசுராசா அவர்களும் வழங்கினர். மலரின் முதல் பிரதியை முதன்மை விருந்தினர் அவர்கள் சமாசத் தலைவருக்கு வழங்கினார். சிறப்பு பிரதிகளை சங்கங்கள். கொத்தணிகள், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

மேலும் மலருக்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் கௌரவ பிரதிகள் வழங்கப்பட்டன. அடுத்து நூலின் ஆய்வுரை இடம் பெற்றது. ஆய்வுரையினை யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி வே.செல்வரத்தின் அவரக்ள் சிறப்பாக வழங்கினார்.

இந்நிகழ்வில் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## 94 வது கூட்டுறவுதின விழா: சங்கங்களில் கோலாகலம்!

### கோண்டாவில் சங்கத்தில்

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 94வது சர்வ தேச கூட்டுறவுதின விழாவை அண்மையில் மிகச் சிறப்பாக கொண்டாடியது.

இவ்விழாவில், கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் மற்றும் சிறந்த அங்கத்தவர், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகி யோருக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, 25 ஆண்டு சேவையினை பூர்த்தி செய்த பணியாளர்களுக்கும் பரி சில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன.

### வலிகாமம் கொத்தணியில்

வலிகாமம் பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கம் 94வது சர்வதேச கூட்டுறவுதின விழாவினையும் நிறுவுனர் நினைவுநாள் நிகழ் வையும் வெகு சிறப்பாக நடாத் தியது.

இந்நிகழ்வில் கொத்தணி யால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற போட்டியாளர்களு க்கான பரிசில்களும், கொத்தணி யின் உறுப்புரிமைச் சங்கங்களில் சிறந்த சங்கம். சிறந்த அங்கத் தவர். பணியாளர்கள் தெரிவு நட த்தப்பட்டு, தெரிவுசெய்யப்பட் டவர்களுக்கு இவ்விழாவில் பரி சில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன.

## சுன்னாகம் பனை தெ.வ.கூ.சங்கம் பல்வேறு நலத்திட்ட செயற்பாடுகளை நேர்த்தியாக மேற்கொண்டு வருகின்றது

சுன்னாகம் பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கம் தனது அங்கத்தவர், பணியாளர்களுக்கான உதவித் திட்டங்களையும் சமூகம் சார்ந்த வேலைத்திட்டங்களையும் மிக நேர்த்தியான முறையில் மேற் கொண்டு வருகின்றது.

### மரக்கன்றுகள் வழங்கல்

இச்சங்கம் வடக்கு கூட்டு றவு அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள மரநடுகை மாத த்தினை முன்னிட்டு அதன் அங் கத்தவர்கள் 168 பேருக்கும், பணியாளர்கள் 38 பேருக்கும், மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் 30 பேருக்கும் நடுகை செய்வ தற்காக தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளதுடன், சங்கத்தின் 14 கிளை நிலையங்களிலும் தேக்கு, மலைவேம்பு, மா மரங் கள் என்பவற்றை நடுகை செய் துள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூ.அ.உதவி ஆணையாளர் திரு பொ.மோகன் அவர்கள் கலந்து கொண்டு மரநடுகையினை தொடக்கி வைத்தார். இதன் போது கூ.அ.அலுவலர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், அங்கத் தவர்கள், பணியாளர்கள் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

### பொங்கல் பொதி வழங்கல்

சங்கத்தின் அங்கத்தவர் கள் 168 பேருக்கும், பணியாள ர்கள் 38 பேருக்கும், மற்றும் முன் பள்ளி ஆசிரியர்கள் 30 பேரு க்கும் இவ்வாண்டு தைப் பொங் கலை முன்னிட்டு தலா ரூபா 760.00 பெறுமதியான பொங்கல் பொதிகளை சங்கம் வழங்கியுள் ளது.

### தொழில் பாதிப்பு நிதி

கடந்த வருட இறுதியில் பெய்த கனமழை காரணமாக தொழில் பாதிப்படைந்த சங்கத் தின் அங்கத்தவர்கள் 168 பேருக்கும் மொத்தமாக ரூபா 3 இலட்சத்து 57 ஆயிரத்து 356 ரூபா நிதியுதவியாக சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.











சுன்னாகம் சங்கத்தின் மரநடுகை நிகழ்வு





## கோண்டாவில்
## 94 வது சர்
## கூட்டுற
## நிகழ்வுகளி


















## வில் சங்கத்தின்
## சர்வதேச
## ட்டுறவுதின விழா
## களின் பதிவுகள்














## இல்லை!!!!!!!!!!!!!!!

- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
- அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
- அந்தாட்டிக்காவில் மரங்கள் இல்லை.
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
- யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
- சிங்கப்பூரில் காகம் இல்லை.
- பூட்டானில் திரையரங்குகள் இல்லை.
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
- பறவைகளிற்கு வியர்வை சுரப்பிகள் இல்லை.
- மலைப்பாம்புக்கு விசம் இல்லை.
- கடலில் முதலைகள் இல்லை.
- யானையின் தும்பிக்கையில் எலும்புகள் இல்லை.
- நண்டுக்கு தலை இல்லை.
- ஆமைக்கு பற்கள் இல்லை.
- வண்ணாத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.
- பாம்புக்கு காது இல்லை.

சி.பிரசாந்தா,
பாரதி முன்பள்ளி,
வசந்தபுரம், இளவாலை.

## பொது அறிவு

01. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் எது?
ஈசல்

02. இனிப்பின் சுவை அறிய முடியாத விலங்கு எது?
பூனை

03. முட்டைகளை அடைகாக்கும் ஆண்பறவை எது?
எமு (Emu)-அவுஸ்ரேலியாவில் உள்ளது.

04. நீரில் வாழ்கின்ற மிகப்பெரிய பாலூட்டி எது?
திமிங்கலம்

05. கண்கள் மூலம் சத்தத்தை கேட்கும் ஈருடக வாழி எது?
தவளை

06. பறவைகள் கூடுகட்டாத மரம் எது?
இலந்தை

07. மனித உடலில் பெரிய சுரப்பி எது?
ஈரல்

08. எறும்புகளில் உள்ள வகைகள் எத்தனை?
14,000 (பதினான்காயிரம்)

09. சுறா மீனின் வாழ்நாள் எத்தனை வருடங்கள்?
20 முதல் 30 ஆண்டுகள்

10. ஒரு மணித்தியாலத்தில் 74மஅ வேகத்தில் ஓடும் பறவை எது?
தீக்கோழி

ச.லக்ஷியா, சு.வசந்தா
சிவானந்தா முன்பள்ளி.

## தெரிந்து கொள்ளுங்கள்

01. பச்சை மிளகாயில் அதன் காம்புப் பாகத்தை அகற்றி அதை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நாட்களுக்கு அந்த மிளகாயை பயன்படுத்தலாம்.
02. எண்ணெய் கறையை அழிப்பதற்கு எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் ஊறவைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.
03. மண்கறையை துணிகளிலிருந்து நீக்குவதற்கு உருளைக் கிழங்குகளை வேகவைத்த நீரில் அந்த துணியை ஊறவைத்து சுத்தம் செய்யவும்.
04. பால் பொங்கும்போது அதை அடக்க முடியவில்லை என்றால் சிரமப்படாமல் அதை அடக்குவதற்கு சிறிது துளிகள் குளிர்ந்த நீரை தெளிக்கவும்.
05. பாலைக் காய்ச்சுவதற்கு முன் அந்தப் பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால் பால் பாத்திரத்தின் அடியில் பிடிப்பதைத் தவிர்க்கலாம்.
06. முட்டையை வேகவைக்கும்போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்க வேகவைக்கும் தண்ணீரில் ஒரு கரண்டி வினிகரை விடவும். அவ்வாறு விட்டால் முட்டையின் ஓடு வெடித்தாலும்கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.
07. வெங்காயத்தின் நாற்றம் உங்கள் வாயிலிருந்து போவதற்கு பற்பசை தான் சிறந்த வழி.
08. பால் புளிக்காமல் இருப்பதற்கு ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்துக்கு பால் புளிக்காமல் இருக்கும்.
09. தோல் உரித்த உருளைக் கிழங்குகளைக் கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரால் தெளித்து குளிர்சாதனப் பெட்டியில் அதை வைக்கவும்.
10. முட்டைகளை 30-40 நாள்கள் வரை கெடாமல் வைப்பதற்கு அதன்மேல் ஒரு பிரால் சமையல் எண்ணையைத் தடவவும்.

## வெந்தயம்

வெந்தயமானது உடலில் ஏற்படும் அத்தனை வியாதிகளிற்கும் பரிகாரமாக அமைவதால் தினமும் அதைச் சேர்த்துக் கொள்வது சாலவும் பொருத்தமானதும் சிறப்பானதும் ஆகும். வஞ்சகமில்லாமல் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மனிதனை வாழ்விக்க வல்லதான பெருங் கைங்கரியத்தை ஆற்றி வருகிறது. எல்லோருடைய அடுக்களையிலும் வெந்தயம் கண்ணாடிப் போத்தலில் இருக்கட்டும். கறிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துப் பாருங்கள். குடும்பமே பெரு வாழ்வு பெறும்.

## யாழ். மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறு.பணி.நலன்புரிச் சங்கத்தின் கற்பகதீபம் மலர் வெளியீட்டின்போது











## அச்சுவேலி சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற 94வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் பதிவுகள்





### கோண்டாவில் சங்கம்

மரநடுகை மாதத்தினை முன்னிட்டு கோண்டாவில் ப.தெ. வ.அ.கூ.சங்கம் அதனது சொந்த நிலப்பிரப்பில் பயன் தரு மரங்களை நாட்டிய நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.




## கூட்டுறவாளர்களுக்கு பொங்கல் பொதி!

தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர், பணியாளர்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கின.

கடந்த சில வருடங்களாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இச்செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாண்டும் பெரும்பாலான சங்கங்கள் தமது அங்கத்தவர், பணியாளர்களுக்கு பொங்கல் பானை உள்ளிட்ட பொங்கலுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் உள்ளடக்கிய பொங்கல் பொதியினை வழங்கியிருந்தமையானது குறைந்த வேதனத்துடன் பணிபுரியும் கூட்டுறவாளர்களுக்கு பேருதவியாக அமைந்துள்ளதாகப் பலராலும் பாராட்டப்படுகின்றது.

## கூட்டுறவாளர் கல்விச் சுற்றுலா!

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் தனது சமூக மேம்பாட்டு கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அண்மையில் கல்விச் சுற்றுலாவினை மேற்கொண்டது.

இச்சுற்றுலாவில் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவாளர்களால் உருவாக்கப்பட்ட சனச பல்கலைக்கழக வளாகத்தை பார்வையிட்டதோடு, இலங்கை பாராளுமன்றத்தின் 2017ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட விவாதத்தினையும், கொழும்பு மிருகக் காட்சிச்சாலை, சிகிரியா போன்ற இடங்களையும், பார்வையிட்டதோடு, மடுமாதா, திருக்கேதீச்சரம் போன்ற ஆலயங்களையும் தரிசித்திருந்தனர்.

## வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள்!

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் 2016ம் ஆண்டுக்கான தமது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளை கடந்த மாதம் நடத்தின.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வருட முடிவில் தங்களது செயற்பாட்டுத் துறைகளோடு இணைந்துள்ள அங்கத்தவர்கள், பணியாளர்கள் மகளிர்குழு உறுப்பினர்கள். முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் இணைத்து வருட முடிவில் ஒன்றுகூடல் நிகழ்வினை நடத்துகின்றன.

இவ் ஒன்றுகூடல் அங்கத்தவர், பணியாளர் களிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு பெரிதும் உதவுகின்றது.

## மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன!

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு கடந்த வருடம் முதல் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தினை மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களால் பெருமளவான பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

இந்த வகையில் இவ்வாண்டும் மரநடுகை மாத்தினை முன்னிட்டு அச்சுவேலி, கோண்டாவில் சங்கங்கள் பெருந்தொகையான தென்னங் கன்றுகள் மற்றும் பயன்தரு மரங்களை கொள்வனவு செய்து அங்கத்தவர், பணியாளர்களுக்கு வழங்கியதோடு, சங்கத்தின் சொந்த நிலங்களிலும் பெருமளவான மரங்களை நாட்டியுள்ளன.



## எமது சங்கத்தின் சேவைகளும் தொழிற்பாடுகளும்

### பிரதான செயற்பாடுகள்

- ♣ கிளை நிலையங்களை நவீனமயப்படுத்தி விற்பனையினை அதிகரித்தல்.
- ♣ பாரிய தொழிற்சாலை அமைப்பில் போத்தற் கள் உற்பத்தி செய்தல்.
- ♣ மீதமான சாற்று உற்பத்திகளை வடிசாலைக்கு வழங்குதல்.
- ♣ கிளை ரீதியாக சுவையுணவு விற்பனை செய்தல்.
- ♣ நிழற்படப் பிரதிச் சேவை.

### கிராமிய வங்கிச் சேவை

- ♣ அங்கத்தவர் சேமிப்பை அதிகரித்தல்.
- ♣ அங்கத்தவர் அல்லாதோரின் நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்.
- ♣ அங்கத்தவர்களின் நிலையான வைப்புக்கு எதிரான கடன் வழங்கல்.
- ♣ அங்கத்தவர் அல்லாதோருக்கு கடன் வழங்கல்.
- ♣ ஓய்வூதியம் வழங்கல்.

### அங்கத்தவர் நலத்திட்டம்

- ♣ அங்கத்தவர் வாழ்வாதாரக் கொடுப்பனவு.
- ♣ விபத்து மரணக் கொடை
- ♣ சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு.
- ♣ கல்வியும் பயிற்சியளிப்பும்.

- ♣ வாடகை வான் சேவை

### கல்விசார் சேவைகள்

- ♣ முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுக்கு அன்பளிப்பும், ஆசிரியர்களுக்கு வேதனமும் வழங்குதல்.
- ♣ அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி.
- ♣ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கல்.
- ♣ அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல்.

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டது]

பொன்னாலை வீதி, சங்கானை. [வரைவுள்ளது] தொலைபேசி: 021 373 5403


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2017ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.